# வரையறுக்கப்பட்ட இலங்கை மின்சார (தனியார்) நிறுவனம்

# தொழில் வாய்ப்புகள்

வ/ப இலங்கை மின்சார தனியார் நிறுவனமானது, நீர்கொழும்பிலிருந்து காலி வரையிலான கடலோர வழியில் அதனது ஏழு கிளைகளினூடாக 650,000 பாவனையாளர்களுக்கு மின்சாரத்தை விநியோகம் செய்கின்ற அமைப்பாகும். 1400 ஊழியர்கள் பணியாற்றும் நிறுவனத்திற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி ADB நிதியத்தின் கீழ் செயற்படுத்தப்படும் மின்சார முறைமையை வலுப்படுத்தும் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஒருங்கிணைப்பு திட்டத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பின்வரும் பதவிக்கு தகுதியான நபரை ஆட்சேர்ப்பு செய்ய எதிர்பார்க்கின்றது.

## மின்சார பயன்பாட்டு CAD மற்றும் மொடெலிங் அதிகாரி
**(Electrical Utility CAD & Modelling Officer)**

| | |
|---|---|
| **கல்வித் தகைமைகள்:** | க.பொ.த. (சா/த) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம் / தமிழ் மொழி, கணிதம் மற்றும் ஆங்கிலம் உட்பட ஐந்து திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல்<br>மற்றும்<br>க.பொ.த. (உ/த) பரீட்சையில் ஒரே அமர்வில் மூன்று பாடங்களில் சித்தி |
| **தொழில்சார் / தொழில்நுட்ப தகைமைகள்** | மின்சாரப் பொறியியல், மின்சார வரைபட தொழில்நுட்பவியலில் தேசிய சான்றிதழ் அல்லது NVQ 05ஆம் நிலை அல்லது இதற்குச் சமமான அங்கீகரிக்கப்பட்ட தகைமை |
| **அனுபவம்** | மின்சாரப் பயன்பாடு அல்லது வலுசக்தி திட்டங்கள், விசேடமாக விநியோக வலையமைப்பு மற்றும் உப நிலையங்களுக்கு CAD வரைபடமிடுதல் மற்றும் மொடலிங்கில் தகைமைக்குப் பின்னரான குறைந்தபட்சம் 03 வருடகால அனுபவம் |
| **தொழில்நுட்பத் திறமைகள்** | Auto CAD தொடர்பில் சிறந்த ஆற்றல் மற்றும் Free CAD மற்றும் / அல்லது Solid Works தொடர்பாக வேலை செய்யும் அறிவு, பயன்பாட்டு வரைபட தரம் (utility drawing standards) மற்றும் திருத்தக் கட்டுப்பாடு (revision control) தொடர்பான பரிச்சியம். பொறியியலாளர்களின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் வேலைகளை மேற்கொள்ளல். |
| **வயது** | 2026 பெப்ரவரி 16ஆம் திகதியில் 40 வயதிற்கு உட்பட்டவராகவிருத்தல். |

**பொதுவான விடயங்கள்**

தெரிவு செய்யப்படும் அபேட்சகர் ஒரு வருடகால ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்படுவார் மற்றும் ஒரு நேர்முகத் தேர்வு மற்றும் / அல்லது CAD திறமைகளின் செயன்முறை மதிப்பீட்டு அடிப்படையில் தெரிவுகள் அமையலாம்.

தெரிவு செய்யப்படும் நபரின் தகைமை மற்றும் அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு போட்டி ரீதியான மற்றும் ஒரு விரிவான கொடுப்பனவு பொதி வழங்கப்படும்.

இலங்கை மின்சார நிறுவனம் அனைவரும் மரியாதையுடன் நடத்தப்படுவதையும், உள்ளடக்கிய சூழலில் பணிபுரிய சம வாய்ப்புகள் வழங்கப்படுவதையும் உறுதிசெய்ய முயல்கிறது. தகுதிவாய்ந்த அனைத்து வேட்பாளர்களும் அவர்களின் வகை, இனம், மதம் மற்றும் கலாசார பின்னணி, பாலினம், பாலியல் நோக்குநிலை அல்லது குறைபாடுகள் ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல் விண்ணப்பிக்க LECO ஊக்குவிக்கிறது.

உங்கள் சுயதரவு, சான்றிதழ்களின் பிரதிகள் அத்துடன் உறவினரல்லாத இரு பரிந்துரையாளர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் தொடர்பிலக்கங்களை 2026 பெப்ரவரி 16ஆம் திகதி அல்லது அதற்கு முன் பின்வரும் நபருக்குக் கிடைக்கும் வகையில் தயவு செய்து அனுப்பவும்.

தபாலுறையின் இடது பக்க மேல் பக்க மூலையில் மற்றும் உங்களது சுய தரவில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

LECO


**மேலதிக பொது முகாமையாளர்,**
**மனித வளங்கள் மற்றும் நிர்வாகம்**
**வ/ப இலங்கை மின்சார தனியார் நிறுவனம்,**
**1 ஆம் மாடி, ஈ.எச். குரே கட்டிடம்.**
**411, காலி வீதி,**
**கொழும்பு-03.**